ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/34 - 2012 දෙසැම්බර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.12.20

*1789/34 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்கள்

*இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளின் நியதிகளின்கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.*

*1. இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கதத்தின் அத்தியாயம் 423) 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக ஆளொருவர், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு, பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.*

*2. இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு இலங்கையில் வதியும் ஆளொருவர் பின்வரும் நோக்கங்களுக்காக மாத்திரம் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.*

(i) *பயணம், தங்குமிடவசதி, மருத்துவம், வாழ்க்கை மற்றும் கல்வி சார்ந்த செலவுகள் உட்பட தனிப்பட்ட தன்மையினவான செலவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு அட்டை வைத்திருப்பவரினால் வெளிநாடுகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ;*

(ii) *வெளிநாட்டில் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளுக்கு ;*

(iii) *1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள், நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு தனிப்பட்ட பயன்பாட்டிற்காக இலங்கைக்குள் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவிற்கு ;*

(iv) *வெளிநாட்டு தொழில்சார் நிபுணத்துவ சபையொன்றிற்கு அல்லது கல்வி நிறுவனமொன்றிற்கு கொடுப்பனவு செய்யத்தக்க தனிப்பட்ட முறையிலான பதிவுக் கட்டணம், பாடக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் வருடாந்த சந்தாக் கட்டணம் என்பனவற்றின் கொடுப்பனவிற்கு ;*

(v) *தனிப்பட்ட தன்மையினவான பயணம் மற்றும் சுகாதார காப்புறுதி என்பவனவற்றிற்காக காப்புறுதிக் கட்டணங்கள் தொடர்பிலான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு ;*

(vi) *இலங்கையில் இருக்கும் வேளையில் தனிப்பட்ட தன்மையினவான வெளிநாட்டுப் பயணம் மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பிலான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு.*

*3. அட்டை வைத்திருப்பவர் தொழிலின் பொருட்டு புலம்பெயரும் அல்லது இலங்கையை விட்டு செல்வதாக இருப்பின் இலங்கையில் வதியும் ஒருவருக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை, அட்டையினை வழங்கிய வங்கியிடம் கையளித்தல் வேண்டும்.*

4. (i) இலங்கையில் வதியுமொருவர், இலங்கைக்கு வெளியே வதியுமொருவருக்கு இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினூடாக செய்யும் ஏதேனும் கொடுப்பனவுகள், பந்தி 2 இன் அதிகார வரம்பிற்குள் அடங்காதனவாக இருக்குமிடத்து, அத்தகைய கொடுப்பனவுகள் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றிலுள்ள கணக்கொன்றில் வரவு வைக்கப்பட்டிருக்கும் நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பானவையாக இருந்தாலொழிய, அவை செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றது.

(ii) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருக்கும் ஒருவருக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையொன்றினூடாக எந்தவொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் இலங்கைக்கு வெளியே வதியுமொருவருக்கு செய்யப்படும் ஏதேனும் கொடுப்பனவுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படுகின்றன.

5. சந்தர்ப்பம் வேறேதேனும் விதத்தில் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக -

**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை என்பது** பயன்படுத்துநர் கொடுகடன், பற்று அல்லது ஏதேனும் வடிவத்தில் பெறுமதிகளை மாற்றல் செய்வதனை இயலுமைப்படுத்தும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கொடுகடன் அட்டை, பற்று அட்டை மற்றும் பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை என்பனவற்றையும் உள்ளடக்குகிறது.

**தனிப்பட்டது** என்பது அட்டை வைத்திருப்பவர் அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் அவரின் பெற்றோர் ஆகியோரின் பயன்பாட்டைக் குறிக்கும் என்பதுடன், எந்தவொரு வர்த்தக நோக்கங்களின் பயன்பாட்டையும் உள்ளடக்கமாட்டாது.

2005 ஆம் ஆண்டு தெத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1411/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2012, திசெம்பர் 20.

1- 152/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.